# வெலிவிடிய திவிதுர பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிவிடிய திவிதுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களுடன் அக் கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கருதுகோள் பற்றிய குறிப்பு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 847,620 பெறுமதியான கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் பொறியும் பொறித்தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) வாகனங்கள், இயந்திரங்கள் திருத்தல்கள் மற்றும் பராமரிப்பு என்ற செலவு தலைப்பிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 38,464 இன் காப்புறுதி செயற்வதற்கு ஏற்பட்ட செலவு சேவைக் கட்டணமாக அரச நிறுவனங்களுக்கு கொடுப்பனவு என காட்டப்பட்டுள்ளது.

(இ) 2012 ஆண்டு தொடரப்பா மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,030,312 தொகை கிடைக்க வேண்டிய தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகள் இடையே ரூபா 4,056,658 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 52,019,810 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதி, நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், பதிவுச் சான்றிதழ் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 361,468 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,150,951 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 ஏக்கர் வரி

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 141,925 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 263,935 இற்கான வாடகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 169,416 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,962,599 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

சொத்துக்கள் பொறுப்புக்களை சட்ட ரீதியாக சாட்டப்படாமை

-------------------------------------------------------------------------------------------------

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பகிரும் குழுவின் விதப்புரையின் பிரகாரம் கரந்தெனிய பிரதேச சபையினால் வெலிவிட்டிய திவிதுர பிரதேச சபைக்கு சாட்டப்பட வேண்டியவை என தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 4,606,306 இற்கான சொத்துக்கள் மற்றும் ரூபா 2,740,757 இற்கான பொறுப்புக்களை அடிப்படையாக வைத்து கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஏப்ரல் 11 திகதி வரையும் குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்ட ரீதியாக பிரதேச சபைக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

3.2.1 வீதி விளக்குகள் உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

---------------------------------------------------------------------------------------------

2014 ஆண்டின் போது வீதி விளக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 518,750 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்ததுடன் வீதி விளக்கு பராமரிப்புக்காக ரூபா 840,064 தொகை செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக அறிவுரைகள் அடங்கிய நீர்பாசன மற்றும் மின்சக்தி அமைச்சின் 1998 மார்ச் 16 திகதிய இலக்கம் பீ.எப்/12/91 சுற்று நிருபத்தின் பிரகாரம் வீதி விளக்குகள் புதிதாக பொருத்துவதற்கு முன்னர் அது தொடர்பாக மின்சக்தி, வலுசக்தி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அவ்வாறு அங்கீகாரம் பெறாமல் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன.

(ii) இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கும் வீதி விளக்குகள் பற்றிய விவரங்களை காட்டக் கூடிய பதிவேடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. வீதி விளக்குகள் பராமரிப்புக்காக துணைக் கருவிகள் வழங்கும் போது குறிப்பிட்ட மின் விளக்கு இனங்கண்டு அது மேற்கொள்ளப்பட்டமையால் அவ்வவ் வீதி விளக்குக்கு பொருத்திய துணைக் கருவிகளினை பயன்படுத்தும் காலம் பற்றிய கவனம் செலுத்தும் முறைமை ஒன்று காணப்படவில்லை.

3.3. குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------

LK-9588 கொண்ட டிபர் வண்டி

----------------------------------------------------

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் 2013 செப்டம்பர் 11 திகதிய இலக்கம்: LK-9588 கொண்ட டிபர் வண்டி சபைக்கு கிடைத்திருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2.5 கியூப் கொள்ளளவினை கொண்ட இந்த டிபர் வண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் குறுகிய பாதைகளில் ஓட்டுவதற்கு இயலாத/ வசதியற்ற நிலைமை ஒன்று காணப்பட்டமையால் அபிவிருத்தி மற்றும் நலன்புரி விடயங்களுக்காக பயன்படுத்த முடியாதுள்ளது.

(ii) 2014 ஆண்டின் போது டிபர் வண்டி வாடகைக்கு கொடுத்ததன் மூலம் ரூபா 128,000 வாடகை வருமானம் பெறப்பட்டுள்ளது. எரிபொருள் செலவு ரூபா 76,368 ஏனைய செலவுகள் ரூபா 90,672 ஆக மொத்தம் ரூபா 167,040 செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் டிபர் வண்டியின் செயற்பாட்டின் மூலம் 2014 ஆண்டில் சபைக்கு ரூபா 39,040 நட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்